**<u>அசல் வழக்கு எண். 146/2019</u>**

01.12.2025

**பெயர் – ஜெயப்பிரகாஷ் த/பெ.நாச்சிமுத்து** (PW3)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் பெறவில்லை. வாதி சரஸ்வதி எனது சகோதரி அவர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் தாராபுரம் வட்டம் கோவிந்தாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனது சகோதரியின் கணவர் நாகராஜனுக்கு அவரது சகோதரர் பிரதிவாதி சொக்கலிங்கம் எழுதி வைத்த செட்டில்மெண்ட்டை ரத்து செய்தது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சொக்கலிங்கம் தாக்கல் செய்த எதிர்வாதத்தில் உள்ள விவரம் தெரியும். சொக்கலிங்கம் நாகராஜனுக்கும், எனது சகோரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்று பொய்யாக சொல்லியுள்ளார்.

(2) தாவாச் சொத்தை நான் பார்த்துள்ளேன். தாவாச் சொத்தின் விஸ்தீர்ணம் தெரியும் தென்வடல் இருபுறமும் 50 அடி, கிழமேல் வடகோட்டில் 11 ½ அடியும், நடுவில் 16 அடியும், தெற்கோட்டில் 14 ½ அடியும் உள்ளது. செட்டில்மெண்ட் ஆவணம் படித்து பார்த்து அதன் அளவுகள் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான் நான் அளந்து பார்க்கவில்லை. நான் வீட்டை பார்த்துள்ளேன். வாதி சரஸ்வதி இறந்து போன நாகராஜனின் மனைவி அல்ல அவருடன் திருமணம் மீறிய உறவில் இருந்தார் என்றால் சரியல்ல.

(3) வாதி சரஸ்வதி தனது முதல் கணவரை விவாகரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. அதன் பின்பு நாகராஜுடன் திருமணம் மீறிய உறவில் இருந்தார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பத்திரிக்கை அடிக்கவில்லை. புகைப்படம் உள்ளது. திருமணத்தை பதிவு செய்யவில்லை. புகைப்படம் வாதியால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நாகராஜன், சொக்கலிங்கம் ஆகியோரின் தாயார் கண்டியம்மாளை சொக்கலிங்கம் தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நாகராஜனும் எனது சகோதரியும் தான் பராமரித்து வந்தார்கள்.

(4) நாகராஜ் நோய் வாய்பட்டு மருத்துவமனையில் இறந்தார் என்றால் சரிதான். அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. சுமார் 1 மாதம் கோவை இராமகிருஷ்ணா மருத்துவமனையில் இருந்தார். நாகராஜ்க்கும் மற்றும் எனது சகோதரிக்கும் 22.11.2011ம்

தேதி திருமணம் நடைபெற்றது. யார் முன்னிலையில் திருமணம் நடந்தது என்றால் நாகராஜனின் தங்கை ஈஸ்வரி, அவரது அண்ணன் ராமசாமி, ராமசாமியின் மனைவி மற்றும் எனது மனைவி மற்றும் மாமியார் முன்னிலையில் நடந்தது. இவர்கள் அனைவரும் தற்போது உயிருடன் உள்ளார்கள். வெளியாட்கள் யாரும் திருமணத்திற்கு வரவில்லை என்றால் இரண்டாவது திருமணம் என்பதால் யாரையும் அழைக்கவில்லை.

(5) பிரதிவாதி சொக்கலிங்கத்துடன் பிறந்தவர்கள் 4 ஆண்கள் 2 பெண்கள் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் 4 ஆண்கள் 1 பெண் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரி சரஸ்வதி சுகாதாரத் துறை துணை இயக்குனர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக திருப்பூரில் பணிபுரிந்து வருகிறார். தாராபுரம் வட்டம் ரஞ்சிதாபுரத்தில் எங்கள் அம்மா வீடு உள்ளது. தாவாச் சொத்தில் எனது சகோதரி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல குடியிருக்கிறார். தாவாச் சொத்தின் கதவு எண். 247-A ஆகும். தாவாச் சொத்து தற்போது குடியிருக்கும் நிலையில் உள்ளதா என்றால் உள்ளது சமீபத்தில் பார்த்தேனா என்றால் இல்லை. நான் பார்த்து வெகுநாட்களாகிவிட்டது சுமார் 2 வருடங்கள் இருக்கும். சாட்சியம் அளிப்பதற்கு முன்பு தாவாச் சொத்தை பார்க்கவில்லை. தாவாச் சொத்து குடியிருக்கு தகுதியில்லாத சிதிலமடைந்த நிலையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது.

(6) நாகராஜன் 30.10.2015ம் தேதி இறந்தார். செட்டில்மெண்ட் பத்திரம் பார்த்துள்ளேன் ரத்து பத்திரத்தை பார்க்கவில்லை. தாவாச் சொத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வாதி சரஸ்வதி எனது சகோதரி என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.01 15:03:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்